உதவி அமர்வு நீதிமன்றம், திண்டுக்கல்.
(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்)
**முன்னிலை: – திருமதி. வா. தீபா, எம்.எல்.,**
உதவி அமர்வு நீதிபதி, திண்டுக்கல்.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20–ம் நாள் திங்கட்கிழமை
**அமர்வு வழக்கு எண். 122/2024.**
C.N.R. No.TNDG03–078080–2024
(முதல்நிலை விசாரணை வழக்கு எண்.47/2023)

தமிழக அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய
குற்ற எண். 481/2018 ………… குற்றமுறையிடுபவர்.

/எதிர்/

ரவி (எ) முட்டைக் கண் ரவி, வயது 59/2018
த/பெ. தில்லையப்பன்,
59, சாஸ்திரி நகர், மாலைப்பட்டி ரோடு,
திண்டுக்கல். ........ எதிரி.

எதிரி மீதான குற்றம் : இவ்வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமி என்பவர் தனது வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்குவதற்காக 10.05.2018ம் தேதி மதியம் 13.00 மணிக்கு திண்டுக்கல் கச்சேரி தெரு சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு சென்ற எதிரி புகார்தாரரைப் பார்த்து தான் திண்டுக்கல்லில் பெரிய ரவுடி ஒழுக்கமாக மாமூல் கொடுடா என மிரட்டியுள்ளார். புகார்தாரர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று சொன்னதும், எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின் முகத்திற்கு நேராக காட்டி மிரட்டி

அச்சுறுத்தி புகார்தாரரின் மேல் சட்டைப் பையில் இருந்த ரூ.500/–ஐ கொள்ளையடித்துள்ளார். அப்போது புகார்தாரர் பயத்தில் சத்தம் போட்டதைப் பார்த்து, எதிரி, புகார்தாரரையும் மற்ற சட்சிகளையும் பார்த்து கையில் வைத்திருந்த கத்தியை தூக்கிக் காட்டி யாராவது பக்கத்தில் வந்தால் உங்களை குத்தி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார். மேற்படி குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392 உ/இ 397, 506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் : | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392 உ/இ 397, 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. |
| எதிரியின் வாதுரை : | குற்றவாளி இல்லை |
| நீதிமன்றத்தின் முடிவு : | குற்றவாளி இல்லை. |
| தீர்ப்பு : | அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392 உ/இ 397, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |

இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R. No. 19/2026–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 பணம்

ரூ.200/-ஐ மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அரசுக்கு ஆதாயமாக்கிட உத்தரவிடப்படுகின்றது. சா.பொ.2 சிறிய இரும்பு கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பாக 20.04.2026-ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் திரு. M. விஜயேந்திரன் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M. பாலச்சந்தர் அவர்களும் முன்னிலையாகி வாதிட்டதைக் கேட்ட பின்னர், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இறுதியாக 20.04.2026-ம் தேதி அன்று விசாரணைக்கு வந்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்த பின்னர், இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்

## தீர்ப்புரை

1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-

இவ்வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமி என்பவர் தனது வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்குவதற்காக 10.05.2018ம் தேதி மதியம் 13.00 மணிக்கு திண்டுக்கல் கச்சேரி தெரு சந்திப்பில் நின்று கொண்டிருந்தபோது, அங்கு சென்ற எதிரி புகார்தாரரைப் பார்த்து தான் திண்டுக்கல்லில் பெரிய ரவுடி ஒழுக்கமாக மாமூல் கொடுடா என மிரட்டியுள்ளார். புகார்தாரர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று சொன்னதும், எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின் முகத்திற்கு நேராக காட்டி மிரட்டி அச்சுறுத்தி புகார்தாரரின் மேல் சட்டைப் பையில் இருந்த ரூ.500/-ஐ கொள்ளையடித்துள்ளார். அப்போது புகார்தாரர் பயத்தில் சத்தம் போட்டதைப்

பார்த்து, எதிரி, புகார்தாரரையும் மற்ற சட்சிகளையும் பார்த்து கையில் வைத்திருந்த கத்தியை தூக்கிக் காட்டி யாராவது பக்கத்தில் வந்தால் உங்களை குத்தி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார். மேற்படி குற்ற செய்கைக்காக எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392, 397, 506(2)–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற அறிக்கையை பரிசீலனை செய்து, முடிவில் இவ்வழக்கானது திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் PRC.No.47/2023 ஆக 20.07.2022–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கின் எதிரிகள் திண்டுக்கல், குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு இவ்வழக்கில் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச. 207 பிரிவின் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து, எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்க குற்றச் சாட்டுக்கள் என்பதால், முதல் நிலை பதிவு வழக்கினை திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 209(அ)ன் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. திண்டுக்கல், முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் இவ்வழக்கானது 16.08.2024–ம் தேதியன்று அமர்வு வழக்கு எண். 122/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரானபோது, இருதரப்பினைக் கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றத்தினை புரிந்திருக்கக் கூடும் என்று அனுமானிக்க போதிய ஆதாரங்கள்

இருந்ததால், எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392 உ/இ 397, 506(2)-ன் கீழ் எழுத்து மூலமான குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார். எதிரி குற்றத்தினை மறுத்த காரணத்தினால், இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

4. அதன் பேரில் அரசுத் தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1, சா.பொ.2 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு :-</u>

I) இந்த வழக்கில் புகார்தாரரான அ.சா.1 பழனிச்சாமி என்பவர் தனது சாட்சியத்தில், தான் திண்டுக்கல் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு இருந்தபோது போலீசார் தன்னிடம் ஒரு கையொப்பம் கேட்டதாகவும், தான் போட்டுக் கொடுத்ததாகவும், எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், எதிரியைப் பற்றியோ, இந்த வழக்கை பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். அ.சா.2 நாகராஜ், அ.சா.3 சிவசிதம்பரம் ஆகியோர் வழக்கின் எதிரியைத் தெரியாது என்றும், வழக்கு விபரம் குறித்து எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார்கள்.

ii) அ.சா.4 சத்தியமூர்த்தி என்பவர் தன்னுடைய சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், 2018ம் ஆண்டு கச்சேரி தெருவில் தானும், தனது நண்பர் கார்திகேயனும் நடந்து போய்க் கொண்டு இருந்தபோது, திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் அங்கு நின்று கொண்டு இருந்தார் என்றும், வழக்கு சம்பவ இடத்தில் படம் வரைந்ததற்கு தங்களிடம் கையொப்பம் கேட்டதால் தாங்கள் கையொப்பம் போட்டுக் கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 சேவியர், அ.சா.6 பாலமுருகன் ஆகியோர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள தங்களது கையொப்பங்களை ஒப்புக் கொண்டு அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார்கள்.

iii) அ.சா.7 தெய்வம், காவல் கூடுதல் கண்காணிப்பாளர் அவர்கள் தன்னுடைய சாட்சியத்தில், தான் 2018–ம் வருடம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, 11.05.2018ம் தேதி 13.30 மணிக்கு சார்பு ஆய்வாளர் திரு. மகேஷ் என்பவர் மேற்படி நிலையப் பொறுப்பில் இருந்தபோது, கல்லுப்பட்டியைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த அ.சா.ஆ.8 எழுத்து மூலமான புகாரினைப் பெற்று அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண். 481/2018, சட்டப்பிரிவுகள் 392, 397, 506(ii) இ.த.சவின் படி வழக்கு அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேல் விசாரணைக்காக தன்னிடம் வைத்த மேற்படி வழக்கு கோப்பை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 14.15 மணிக்கு சம்பவ இடம் சென்று 14.30 மணிக்கு சாட்சிகள் சத்தியமூர்த்தி, கார்த்திகேயன் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.10 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும்,

பின்னர் சாட்சிகள் சத்தியமூர்த்தி, கார்த்திகேயன், பழனிச்சாமி, நாகராஜ், சிவசிதம்பரம், சந்திரசேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்பு அன்றைய தினமே 16.30 மணிக்கு நத்தம் ரோடு, விஜய் தியேட்டர் முன்பு தகவலாளி அடையாளம் காட்டிய எதிரியான ரவி என்கிற முட்டைக்கண் ரவியை வழக்கின் காரணம் கூறி சாட்சிகளான சேவியர் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து தொடர்ந்து விசாரணை செய்தபோது, அவர் தானாக முன் வந்து சாட்சிகள் முன்னிலையில் எவ்வித வற்புறுத்தலும், தூண்டுதலும், ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்து தன்னிச்சையாக சாட்சிகள் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அன்றைய தினம் காலை 08.00 மணிக்கு வாதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி ரூ.500/– ஐ கொள்ளையடித்ததாகவும், மேற்படி கொள்ளையடித்த ரூ.500/–ல் ரூ.300/– ஐ செலவழித்து விட்டதாகவும், மீதமுள்ள ரூ.200/– ஐ ஆஜர் செய்வதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் வாதியிடம் கத்தியைக் காட்டி மிரட்டி கொள்ளையடித்த இடத்தை அடையாளம் காட்டி, சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை மறைத்து வைத்துள்ள இடத்தில் இருந்து எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறியதன் அடிப்படையில், அதே இடத்தில் அதே சாட்சிகள் முன்னிலையில் 17.15 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த ரூ.200/–ஐ அ.சா.ஆ.13 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டதாகவும், அன்றைய தினமே 17.45 மணிக்கு திண்டுக்கல், குள்ளனம்பட்டி, உணவு தானிய கிடங்கு அருகே உள்ள முட்புதருக்கு எதிரி மற்றும் சாட்சிகளுடன் சென்று, சாட்சிகள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1 சிறிய இரும்பு கத்தி – 1 ஐ அ.சா.ஆ.14 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிக் கொண்டதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் சாட்சிகளான சேவியர் மற்றும் பாலமுருகன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம்

பதிவு செய்து, எதிரியை தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், வழக்கு சொத்துக்களான ரூ. 200/– மற்றும் சிறிய இரும்பு கத்தி – 1 ஆகியவற்றை தனித் தனியே அ.சா.ஆ.15, அ.சா.ஆ.16 படிவம் – 91–ன் மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கின் சாட்சிகளை விசாரணை செய்து தனது புலன் விசாரணை முடித்து, வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 392 r/w 397 and 506(ii) இ.த.ச.வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும், இவ்வழக்கு சாட்சிகளான அசா. 1 முதல் அ.சா.6 வரை உள்ளவர்கள் தனது விசாரணையின்போது வாக்குமூலத்தில் கூறியவாறுதான் கூறினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இந்த எதிரிக்குப் பாதகமாகத் தோன்றிய சங்கதிகளை குறித்து எதிரியிடம் பிரிவு 351 BNSS–ன் கீழ் விசாரணை செய்தபோது, எதிரி அரசுத்தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார். எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படாததால், விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

7. தற்போது இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், இவ்வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச் சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>தீர்வு:–</u>**

8. அரசுதரப்பு வழக்கில் இவ்வழக்கின் புகார்தாரர் பழனிச்சாமி என்பவர் தனது வீட்டிற்குத் தேவையான சாமான்கள் வாங்குவதற்காக 10.05.2018ம் தேதி மதியம் 13.00 மணிக்கு திண்டுக்கல் கச்சேரி தெரு சந்திப்பில் நின்று

கொண்டிருந்தபோது, அங்கு சென்ற எதிரி புகார்தாரரைப் பார்த்து தான் திண்டுக்கல்லில் பெரிய ரவுடி ஒழுக்கமாக மாமூல் கொடுடா என மிரட்டியுள்ளார். புகார்தாரர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று சொன்னதும், எதிரி தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து புகார்தாரரின் முகத்திற்கு நேராக காட்டி மிரட்டி அச்சுறுத்தி புகார்தாரரின் மேல் சட்டைப் பையில் இருந்த ரூ.500/-ஐ கொள்ளையடித்துள்ளார். அப்போது புகார்தாரர் பயத்தில் சத்தம் போட்டதைப் பார்த்து, எதிரி, புகார்தாரரையும் மற்ற சாட்சிகளையும் பார்த்து கையில் வைத்திருந்த கத்தியை தூக்கிக் காட்டி யாராவது பக்கத்தில் வந்தால் உங்களை குத்தி கொன்று விடுவேன் என கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்றும், அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய போலீசாரால், எதிரி மீது வழக்கு பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டு இ.த.ச பிரிவுகள் 392 உ/இ 397, 506(2)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

9. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.16 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1, சா.பொ.2 சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

10. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் முறையாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்று பரிசீலிக்கையில், இந்த வழக்கில் சம்பவம் பற்றியும் புகார் கொடுத்தது பற்றியும், மற்ற விபரங்கள் பற்றியும் கூறும் சாட்சியாக அ.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் சம்பவம் பற்றியும் மற்றும் விவரங்கள் பற்றியும் கூறும்

சாட்சிகளாகவும், அ.சா.4 மாதிரி வரைபடம், பார்வை மகஜரில் கையொப்பம் செய்தது குறித்தும், அ.சா.5, அ.சா.6 ஆகியோர் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்தது குறித்தும், அ.சா.7 காவல் ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யது குறித்து சாட்சியம் அளிப்பவராகவும், மேற்படி சாட்சிகள் சாட்சிப் பட்டியலில் கண்டுள்ளவாறு விசாரிக்கப்பட்டுள்ளனர்.

11. இந்த வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபரும், புகார்தாருமான அ.சா.1 மற்றும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்கள் இந்த வழக்கிற்கு மிக முக்கியமான சாட்சியங்களாகும். அவர்களது சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அ.சா.1 தன் சாட்சியத்தில், தான் வேலை பார்க்கும் இடத்திற்கு போவதற்காக திண்டுக்கல் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு இருந்தபோது போலீசார் தன்னிடம் ஒரு கையொப்பம் கேட்டதாகவும், தான் போட்டுக் கொடுத்ததாகவும், எதற்காக கையொப்பம் செய்தேன் என்று தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், எதிரியைப் பற்றியோ, இந்த வழக்கை பற்றியோ தனக்கு எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கின் எதிரியைத் தனக்குத் தெரியாது என்றும், இந்த வழக்கின் விபரம் எதுவும் தெரியாது என்றம், திண்டுக்கல் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுநராக வேலை பார்த்த போது, போலீசார் தன்னிடம் வந்து ஒரு கையெழுத்து கேட்டார்கள் என்றும், எதற்காக போட்டேன் என்று தனக்குத் தெரியாது என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு

சாட்சியான அ.சா.3ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், இந்த வாக்கின் எதிரியைத் தெரியாது என்றும், வழக்கின் விபரம் குறித்து எதுவும் தெரியாது என்றும், தான் திண்டுக்கல் பூ மார்கெட்டிற்கு பூ கொண்டு கொடுததுவிட்டு திரும்ப வந்து கொண்டிருக்கும்போது, மாரியம்மன் கோவில் அருகே சத்தமாக இருந்தத என்றும், என்னவென்று கேட்டதற்க ஏதோ சத்தம் கேட்டதாக சொன்னார்கள் என்றும், தான் வேறு எதையும் பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக மாறி இருக்கிறார். மேற்படி அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய மூவரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், புகார்தாரரான அ.சா.1 புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது இல்லை என்று சாட்சியமளித்துள்ளதிலிருந்து, புகார் மனுவின் உண்மைத் தன்மை குறித்து சந்தேகத்திற்குரியதாகவே உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மூன்று சாட்சிகளும் எதிரியைப் பற்றியோ, வழக்கு சம்பவம் குறித்தோ எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ள நிலையில், அவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12. போலீசார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்து அ.சா.4 விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது முதல் விசாரணையில், பார்வை மகஜரில் உள்ள தங்களது கையொப்பத்தை ஒப்புக் கொண்டுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில், பார்வை மகஜரில் என்ன எழுதி இருந்தது என்றால் தனக்குத் தெரியாது என்றும் கூறியிருந்தாலும், போலீசார் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது.

13. இந்த வழக்கின் மிக முக்கிய சாட்சிகளான எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலம் மற்றும் அத்தாட்சியில் கையொப்பம் செய்த சாட்சிகளான அ.சா.5 மற்றும்

அ.சா.6 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், அவர்கள் இருவரும் மேற்படி ஆவணங்களில் உள்ள தங்களது கையொப்பங்களை மட்டும் ஒப்புக் கொண்டு அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளான மாறி இருக்கிறார்கள். எனவே, அவர்களது சாட்சியங்களும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், புகார்தாரரான அ.சா.1 மற்றும் அ.சா.2, அ.சா.3, அ.சா.5, அ.சா.6 ஆகிய சாட்சிகள் அனைவரும் எதிரியைத் தெரியாது என்றும், வழக்கு சம்பவம் குறித்து தெரியாது என்றும் சாட்சியமளித்து அவர்கள் அரசு தரப்பில் பிறழ் சாட்சிகளாக கருதப்பட்டுள்ள நிலையில், எதிரி தான் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பது குறித்து மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் அமையவில்லை. அ.சா.7 இவ்வழக்கினை புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து முடிவு செய்துவிடலாகாது. அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தகுந்த மற்றும் நீதிமன்றம் ஏற்கும் படியான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை முன்னிலைப்படுத்தி, நியாயமான சந்தேகங்களுங்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.7 புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியமானது அவர் தனது அரசு பணியைச் செய்யும் போது, சொல்லப்பட்ட ஒன்றாகவே கருத இயலும். எனவே, எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்து அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கி தீர்ப்பு அளிப்பது தான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15. இறுதியாக, மேலே விவரிக்கப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் வழக்கை பரிசீலிக்கின்றபோது, அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 392

உ/இ 397, 506(2)–ன் கீழான குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் ஐயத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி, எதிரியை மேற்படி பிரிவின் கீழான குற்றச் சாட்டுக்களுக்கு குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு கு.வி.மு.ச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

16. இந்த வழக்கில், இந்நீதிமன்ற R.P.R.No.19/2026–ல் கைப்பற்றப்பட்ட சா.பொ.1 பணம் ரூ.200/–ஐ மேல் முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அரசுக்கு ஆதாயமாக்கிட உத்தரவிடப்படுகின்றது. சா.பொ.2 சிறிய இரும்பு கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்குப் பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழைகள் நீக்கப்பட்டு, இன்று 2026–ம் வருடம் ஏப்ரல் மாதம் 20–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.20 14:40:47 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.

<u>அரசுத் தரப்புச் சாட்சிகள்:–</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. பழனிச்சாமி |
| அ.சா.2 | திரு. நாகராஜ் |
| அ.சா.3 | திரு. சிவசிதம்பரம் |
| அ.சா.4 | திரு. சத்தியமூர்த்தி |
| அ.சா.5 | திரு. சேவியர் |
| அ.சா.6 | திரு. பாலமுருகன் |
| அ.சா.7 | திரு. தெய்வம், காவல் ஆய்வாளர் |

**அரசுத் தரப்புச் சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 11.05.2018 | தேதியிட்ட பார்வை மகஜரிலுள்ள அ.சா.4ன் கையொப்பம் மட்டும். |
| அ.சா.ஆ.2 | 11.05.2018 | தேதியிட்ட எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அ.சா.5ன் முதல் கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.3 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.5ன் முதல் கையொப்பம் மட்டும் (கத்தி) |
| அ.சா.ஆ.4 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.5ன் முதல் கையொப்பம் மட்டும் (பணம்) |
| அ.சா.ஆ.5 | 11.05.2018 | தேதியிட்ட எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அ.சா.6ன் இரண்டாவது கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.6 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.6ன் 2வது கையொப்பம் மட்டும். (கத்தி) |
| அ.சா.ஆ.7 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரிலுள்ள அ.சா.6ன் இரண்டாவ கையொப்பம் மட்டும் (பணம்) |
| அ.சா.ஆ.8 | 11.05.2018 | தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.9 | 11.05.2018 | தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.10 | 11.05.2018 | தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.11 | 11.05.2018 | தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.12 | 11.05.2018 | தேதியிட்ட எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் |
| அ.சா.ஆ.13 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் (பணம்) |
| அ.சா.ஆ.14 | 11.05.2018 | தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜர் (கத்தி) |
| அ.சா.ஆ.15 | 11.05.2018 | தேதியிட்ட படிவம் 91 |
| அ.சா.ஆ.16 | 11.05.2018 | தேதியிட்ட படிவம் 91 |

**அரசுதரப்பு சான்று பொருள் :**

| | |
|---|---|
| சா.பொ.1 | பணம் ரூ.200/– மட்டும். |
| சா.பொ.2 | சுமார் 20.05 செ.மீ நீளமுள்ள சிறிய இரும்பு கத்தி ஒன்று |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும், சான்றாவணம் :** இல்லை

**எதிரிகள் தரப்பு சான்று பொருள் :** இல்லை

**குறிப்பு:-**

1. இந்த வழக்கில் எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்கு அழைக்கப்படவில்லை.

2. இவ்வழக்கின் முடிவு குறித்து இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. சொத்து பற்றிய உத்தரவு உரிய பதிவேட்டில் பதிய உத்தரவிடப்பட்டது.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.20 14:40:34 +0530

உதவி அமர்வு நீதிபதி,
(தலைமை நீதித்துறை நடுவர்)
திண்டுக்கல்.